# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 44/ந/2026, நாள் 13.08.2026**

S. நடேசன்,
வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
வந்தவாசி நகராட்சி, திருவண்ணாமலை மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, காந்தி ரோடு, எண். 19/6 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. நடேசன் என்பவரது 23.12.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.12.2025 அன்று பெறப்பட்டு, 44/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, காந்தி ரோடு, எண். 19/6 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. நடேசன் என்பவரின் 23.12.2025 நாளிட்ட புகார் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்டுள்ள மனுதாரரின் 09.12.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"நகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து 31.12.2012ல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்று மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வந்தவாசி பேரூராட்சியாக இருந்தபோது 01.03.1997ல் தனிமலம் எடுப்பவராக (Scavenger) பணியில் சேர்ந்தேன். 10.08.1990ல் (பூச்சியில் ஆராய்ச்சி நிலையம், ஓசூரில்) பயிற்சி பெற்று களப்பணி உதவியாளராக பதவி உயர்வு பெற்று 01.07.2008ல் DPH பூந்தமல்லி, சென்னையில் துப்புரவு ஆய்வாளர் பயிற்சி பெற்று வந்தவாசியில் பணிபுரிந்து வந்தேன். 14.11.2008ல் வந்தவாசியில் இருந்து செங்கல்பட்டு நகராட்சிக்கு மாறுதலில் சென்றுவிட்டேன். 01.03.1997 முதல் 14.11.2025 வரை வந்தவாசியில் பணிபுரிந்த காலத்தில் எனது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்த பிற்கால வைப்பு நிதிக்கு உண்டான வட்டி கணக்கிட்டு வழங்குமாறு வந்தவாசி நகராட்சி ஆணையருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமாக 13.10.2025 பொதுத்தகவல் அலுவலருக்கு 28.11.2025ல் மேல்முறையீட்டு அலுவலருக்கு மனு செய்தேன்.

45 நாள் பதில் இல்லை. 01.12.2025 அன்று பொதுத்தகவல் அலுவலர், மேல்முறையீட்டு அலுவலர் இருவரிடம் இருந்து ஒரே பதில் வந்தது. அந்த பதில் எனக்கு திருப்தியாக இல்லை. பதில் விவரம் தற்போது 2011–2012 முதல் 2023–2024 வரை மட்டுமே சேமநல நிதி வட்டி தோகை வழங்கப்பட்டுள்ளது என்று தகவல் வழங்கப்படுகிறது.

இந்த பதில் என் கேள்விக்கு உண்டான பதில் இல்லை. 08.12.2025 அன்று நகராட்சி ஆணையருக்கு பதில் எழுதி உள்ளேன்.

எனது கேள்வி 01.03.1997 முதல் 14.11.2008 நான் பணி செய்த காலத்தில் எனது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பிற்கால வைப்பு நிதிக்கு உண்டான வட்டி தொகை வழங்குமாறு கடிதம் எழுதி உள்ளேன்.

மார்ச் 2025ல் வந்தவாசி நகராட்சியில் ஓய்வு பெற்றவர்கள் 20 நபர்கள். நான் உள்பட சேமநல நிதி வட்டி கேட்டு மனு செய்து இருந்தோம். நவம்பர் 2025ல் ஒரு சிலருக்கு வட்டி பணம் வழங்கி உள்ளார்கள். அதில் எனக்கும் இன்னும் சிலருக்கும் இல்லை.

தாங்கள் எனது வருங்கால வைப்பு நிதிக்கு உண்டான வட்டித்தொகை வழங்க ஆவன செய்யுமாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறேன்''. என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் வந்தவாசி நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை

4. இந்நிலையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையர் ஆகியோரை 25.06.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 15.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 25.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

''நான் வந்தவாசி பேரூராட்சியாக இருந்தபோது 01.03.1997ல் பணியில் சேர்ந்தேன். 14.11.2008ல் வந்தவாசியில் இருந்து செங்கல்பட்டு நகராட்சிக்கு பணிமாற்றம் செய்யப்பட்டேன்.

01.03.1997முதல் 14.11.2008 வரை வந்தவாசியில் பணிபுரிந்த காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு நிதிக்கு வட்டி கிடைக்கவில்லை.

01.03.1997 முதல் 14.11.2008 வரை நான் வந்தவாசியில் பணியாற்றிய காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பிற்கால வைப்பு நிதிக்கு வட்டித்தொகையினை பெற்றுத்தருமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்''.

6. எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண்.883 /2026/சி1, நாள் 24.06.2026ல், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பொது சுகாதாரம் பணிகள் மற்றும் குடிநீர் சம்மந்தமான திட்டப்பணிகள் குறித்து மாதாந்திர நேரடி ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள இருப்பதால், நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு. பெ. சிவகுமார் என்பவரை 25.06.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் உரிய ஆவணங்களுடனும், விரிவான அறிக்கையுடனும் கலந்து கொள்ள அனுப்பிவைப்பதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நகராட்சி வருவாய் ஆய்வாளர் திரு. பெ. சிவகுமார் என்பவர் 25.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

''மனுதாரரின் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு 01.03.1997 முதல் 14.11.2008 வரை உள்ள காலகட்டத்திற்கு முறையாக தணிக்கை செய்யப்பட்டு அவருக்கு வழங்கப்பட வேண்டிய பிற்கால

வைப்பு நிதி வட்டித் தொகை ரூ.31,123/– (ரூபாய் முப்பத்தி ஓராயிரத்து நூற்றி இருபத்தி மூன்று மட்டும்) வழங்கப்பட வேண்டியுள்ளது.

மேற்படி அவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.31,123/– இன்னும் ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்பு பணிந்து சமர்ப்பிக்கிறேன்''.

மேற்படி விசாரணையின் போது எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையரிள் கடிதம் ந.க.எண்.882/2026/சி1, நாள் 24.06.2026ன் வழி மனுதாரரின் குற்றச்சாட்டுகள் மீதான ஆணையரின் விரிவான அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். அதில்–

வந்தவாசி நகராட்சி களப்பணி உதவியாளராக பணிபுரிந்த திரு. S. நடேசன் என்பவர் 01.07.2008ல் துப்புரவு ஆய்வாளராக பயிற்சி பெற்று 14.11.2008ல் இந்நகராட்சியில் இருந்து செங்கல்பட்டு நகராட்சிக்கு பதவி உயர்வின் காரணமாக பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். தனியருக்கு கீழ்காணும் விவரப்படி பிற்கால சேமநலநிதி கணக்கில் இருந்து தொகை வழங்கப்பட்டது.

| பெயர் / பதவி | பதவி உயர்வில் செங்கல்பட்டு நகராட்சிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்ட தேதி |
|---|---|
| திரு. S. நடேசன், களப்பணி உதவியாளர் | **14.11.2008** |
| Particulars | Amount (Rs.) |
| Opening Balance – 2008 - 2009 | 28763 |
| 5th pay Commission Arrear | 2515 |
| 6th pay Commission | 3537 |
| April-2008 to Nov 2008 PF Subscription | 8000 |
| PF Loan Repayment | 18660 |
| **Closing Balance – 2008 - 2009** | **61475** |
| 6th Pay commission 50% Amount issued on date 20.05.2008 Voucher No.10 | 3537 |
| Loan issued on Voucher No.4 Date 16.05.2008 | 25500 |
| 5th Pay issued on Voucher No.86 Date 24.03.2009 | 2515 |
| 5th Pay issued on Voucher No.86 Date 24.03.2009 | 29923 |
| **Total** | **61475** |
| Closing Balance – 2008 - 2009 | 0 |

தனியருக்கு பிற்கால சேமநலநிதி தொகை மேற்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் 14.11.2008 அன்று பதவி உயர்வில் செங்கல்பட்டு நகராட்சிக்கு பணியிடமாற்றம் செய்யப்பபட்டுள்ளதால், தனியருக்கு பிற்கால சேமநலநிதி வட்டித் தொகை கணக்கிட்டு வழங்கப்படாமல் உள்ளது என மனுவில் தெரிவித்துள்ளார். எனவே, தற்போது ஆவணங்கள் மற்றும் கோப்புகள் அடிப்படையில் தனியருக்கு வழங்கப்படவேண்டிய வட்டி தொகையை கண்டறிந்து, உறுதி செய்யப்பட்டு சேமநலநிதி பிற்கால வட்டித் தொகையை திரு. S. நடேசன் என்பவருக்கு திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், மேற்படி நகராட்சி ஆணையரின் அறிக்கையுடன் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய பிற்கால வைப்பு நிதித் தொகைக்கான வட்டித் தொகை வழங்குவது குறித்து அட்டவணை வாயிலான விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு தாக்கல் செய்துள்ளார்.

Opening Balance For PFIC

Vandavasi Municipality, Thiruvannamalai District

| Name | PFNO | Year | Sub. Amount | Withdrawal | Op. Balance | Interest | CB |
|---|---|---|---|---|---|---|---|
| Natesan S | 85 | 1993 | 2297.00 | 1000.00 | 2491.00 | 310.00 | 4098.00 |
| | | 1994 | 3480.00 | 2000.00 | 4098.00 | 476.00 | 6054.00 |
| | | 1995 | 5180.00 | 6000.00 | 6054.00 | 657.00 | 5891.00 |
| | | 1996 | 5310.00 | 0.00 | 5891.00 | 1079.00 | 12280.00 |
| | | 1997 | 4900.00 | 5000.00 | 12280.00 | 1204.00 | 13384.00 |
| | | 1998 | 8700.00 | 15900.00 | 13384.00 | 1267.00 | 7451.00 |
| | | 1999 | 14286.00 | 10000.00 | 7451.00 | 1711.00 | 13448.00 |
| | | 2000 | 19937.00 | 9628.00 | 13448.00 | 2101.00 | 25858.00 |
| | | 2001 | 20640.00 | 26455.00 | 25858.00 | 2495.00 | 22538.00 |
| | | 2002 | 20018.00 | 14025.00 | 22538.00 | 2413.00 | 30944.00 |
| | | 2003 | 20542.00 | 20000.00 | 30944.00 | 2270.00 | 33756.00 |
| | | 2004 | 22680.00 | 23880.00 | 33756.00 | 2439.00 | 34995.00 |
| | | 2005 | 23830.00 | 27300.00 | 34995.00 | 2852.00 | 34377.00 |
| | | 2006 | 29650.00 | 32800.00 | 34377.00 | 2809.00 | 34036.00 |
| | | 2007 | 31110.00 | 12500.00 | 34036.00 | 3215.00 | 55861.00 |
| | | 2008 | 26660.00 | 61475.00 | 55861.00 | 3825.00 | 24871.00 |
| **Total** | | | | | | **31123.00** | |

7. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:–

வந்தவாசி பேரூராட்சியாக இருந்தபோது 01.03.1997ல் பணியில் சேர்ந்த மனுதாரர் 14.11.2008ல் செங்கல்பட்டு நகராட்சிக்கு பணிமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பதும், துப்புரவு ஆய்வாளராக பணிபுரிந்து 31.12.2012ல் ஒய்வு பெற்றுள்ளார் என்பதும், மனுதாரர் உள்பட வந்தவாசி நகராட்சியில் ஒய்வு பெற்ற 20 நபர்கள் சேமநல நிதி வட்டித் தொகை வழங்க கோரி மார்ச் 2025ல் மனு செய்ததில், ஒரு சிலருக்கு நவம்பர் 2025ல் வட்டித் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதும், பணிகாலமான 01.03.1997முதல் 14.11.2008 வரை வந்தவாசியில் பணிபுரிந்த காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்பு நிதிக்கு வட்டி தொகை வழங்கப்படவில்லை என்பதும், மேற்படி வட்டித் தொகையினை வழங்கி மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

மனுதாரரின் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு 01.03.1997 முதல் 14.11.2008 வரையிலான பணிகாலத்திற்கான பிற்கால வைப்பு நிதி வட்டித் தொகை தணிக்கை செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரருக்கு பிற்கால வைப்பு நிதி வட்டித் தொகை ரூ.31,123/– (ரூபாய் முப்பத்தி ஓராயிரத்து நூற்றி இருபத்தி மூன்று மட்டும்) வழங்கப்பட வேண்டியுள்ளது என்பதும், ஒரு வார காலத்திற்குள் மேற்படித் தொகை மனுதாரருக்கு வழங்கப்படும் என்பதும் எதிர்மனுதாரரான வந்தவாசி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

இந்நேர்வில், நகராட்சி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.1655/2023/டி2, நாள் 06.07.2026ன்படி மனுதாரருக்கு 1993–94 முதல் 2008 வரை அனுமதிக்கப்பட்ட பிற்கால வைப்பு நிதி வட்டித் தொகை ரூ.31,123/– (ரூபாய் முப்பத்தி ஓராயிரத்து நூற்றி இருபத்தி மூன்று மட்டும்) வழங்கிட

அனுமதிக்கப்பட்டு, தற்போது வழங்கப்பட்டுள்ளது என வந்தவாசி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.883/2026/சி1, நாள் 15.07.2026ல் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி வருவாய் ஆய்வாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மனுதாரருக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாலும், இப்பொருள் தொடர்பான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 13–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. S. நடேசன்,
   துப்புரவு ஆய்வாளர் (ஓய்வு),
   19/6, காந்திரோடு, வந்தவாசி – 604 408,
   திருவண்ணாமலை மாவட்டம்.
2. நகராட்சி ஆணையர்,
   வந்தவாசி நகராட்சி,
   திருவண்ணாமலை மாவட்டம் – 604 408,.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032

14/8/26
செயலாளர்.
14/8/26